SENIOR SUNDAY CLASS

யோசேப்பின் வாழ்க்கை

முகவுரை

I *விரிவான விடையளி :* (10 Marks)

1. யோசேப்பு, கர்த்தராகிய இயேசு இவ்விருவரின் வாழ்க்கைச் சம்பவங்களை நாம் எவ்வாறு ஒப்பிடலாம்? *(அல்லது)* கர்த்தராகிய இயேசுவோடு ஒப்பிட்டுப்படிக்கும்படி யோசேப்பின் சரித்திரத்தைப் போல மிகவும் பொருத்தமான வேறொரு சரித்திரம் வேதாகமத்தில் இல்லை - என்று எவ்வாறு கூறலாம்.

விடை: யோசேப்பும் கர்த்தராகிய இயேசுவும் (முகவுரை)

பாடம்-1

தேவனின் பணித்தளங்கள்

I *விரிவான விடையளி:* (10 Marks)

1. 'யோசேப்பினுடைய இளமைப்பருவத்தில் அவனது குடும்பத்தின் ஆவிக்குரிய தரம் மிகவும் நிர்ப்பந்தமானதாயிருந்தது' - என்பதை எடுத்துக் காட்டுகளுடன் விவரி?

(அல்லது)

யோசேப்பு ஒரு பரிசுத்தவானாக உருவாக்கப்படுவதற்கு அவனுடைய குடும்பத்தின் ஆவிக்குரிய ஜீவியத்தின் நிர்பந்தமானதரம் தடையாயிருக்கவில்லை என்று ஏன் கூறப்படுகிறது?

(அல்லது)

'நாம் எப்படிப்பட்ட சூழ்நிலையில் வைக்கப்பட்டிருந்தாலும், நம்மில் ஒரு மேன்மையான கிரியையை நடப்பிக்கத் தேவனுடைய கிருபை வல்லமையுள்ளதாயிருக்கிறது' - என்ற கூற்றை யோசேப்பின் வாழ்க்கையில் நடந்த சம்பவத்தை மேற்கோள்காட்டி நிரூபி.

விடை : (பக்கம் 1 & 2)

2. தேவன் பல விகற்பமான சூழ்நிலைகளையும் கடினமான மனுஷரையும் நம் ஜீவிய பாதையில் அனுமதிப்பின் நோக்கம் என்ன?

(அல்லது)

தேவன் துரிதமாக யோசேப்பை ஒரு மேன்மையான பரிசுத்தவானாக மாற்ற வேண்டுமென்று அவனுடைய வாழ்வில் அனுமதித்த விகற்பமான சூழ்நிலைகள் யாவை?

<u>விடை :</u> *(பக்கம் 2 கடைசி பத்தி - பக்கம் 4 வரை)*

II *<u>விரிவாக, தெளிவாக வசன ஆதாரத்துடன் விடையளி:</u>* (15 Marks)

1. 'தேவன் நம் ஜீவியத்தின் மேல் ஆதிக்கம் செலுத்துவாராயின் எந்தச் சூழந்நிலையாலும், நம்முடன் வைக்கப்பட்டுள்ள எந்த நபராலும் நம் நற்பண்புகள் பாதிக்கப்பட முடியாது' - என்பதை யோசேப்பு, தானியேல், சாமுவேல் போன்ற தேவபிள்ளைகளின் ஜீவியத்தில் நடந்த நிகழ்ச்சிகளை மேற்கோள் காட்டி விளக்குக

(அல்லது)

'தேவன் தம்முடையவர்களை முரண்பட்ட சுபாவங்களுள்ளவர்கள் மத்தியில் வைத்து உருவாக்குகிறார்' - என்ற கூற்றை வசன ஆதாரத்துடன் விளக்குக.

<u>விடை :</u> (பக்கம் 1 to 7)



பாடம்-2

<u>உன்னைப் போல் பிறரையும் நேசி</u>

I *<u>விரிவான விடையளி:</u>* (10 Marks)

1. 'நம்மைத் திருத்தும்படி தேவன் மனிதரை எழுப்பும் போது நாம் அவர்களுக்கு எதிர்த்து நின்றால் நாம் நம்முடைய சுயவழிகளில் நடக்கும்படி தேவன் நம்மை விட்டுவிடுவார்" - என்பதை சவுலின் ஜீவியத்தில் நடந்த நிகழ்ச்சிகளை மேற்கோள்காட்டி எழுதுக.

<u>விடை :</u> (பக்கம் 10 & 11)

2. கடிந்து கொள்ளுதலை வெறுத்த சவுல் மற்றும் யோசேப்பின் சகோதரரின் முடிவையும், அதை மனத்தாழ்மையுடனும் பணிந்த ஆவியுடனும் எற்றுக் கொண்ட தாவீது, யோசேப்பு ஆகியோரின் முடிவையும் வசன ஆதாரத்துடன் எழுது? இதிலிருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டிய சத்தியம் என்ன?

<u>விடை :</u> (பக்கம் 10 - 12)

3. பிறருடைய தவறுகள் நமக்குத் தெரியவரும்போது நாம் என்ன செய்ய வேண்டும் என்பதை எடுத்துக் காட்டுகளுடனும் வசன ஆதாரத்துடனும் விவரி.

<u>விடை :</u> (பக்கம் 8 & 9)

பாடம்-3

உன் பிதாவுக்கடுத்தவைகளில் அலுவலாயிரு

I *<u>விரிவான விடையளி:</u>* (10 Marks)

1. 'இளமைப்பருவமே கர்த்தருக்கு நம்மை அர்ப்பணிக்கத்தக்க மிகச் சிறந்த பருவமாகும்' - என்பதை மேற்கோள்களுடன் விவரி,

விடை : (பக்கம் 13 & 14)

2. 'தேவன் தம்முடைய நோக்கத்தை நிறைவேற்றுவதற்கென தங்கள் வேலைகளில் அலுவராயிருந்தவர்களையே அழைத்திருக்கிறார்' - என்பதை சான்றுகளுடன் எழுது.

விடை : (பக்கம் 14 & 15)

3. 'சோம்பலாயிருக்கும் நேரமே பிசாசு மோசம்போக்கும் சமயம்' - என்பதை தாவீதின் ஜீவியத்தில் நடந்த நிகழ்ச்சியை மேற்கோள்காட்டி எழுது.

விடை : (பக்கம் 15)

4. 'பலவருண அங்கி' - என்பதின் ஆவிக்குரிய கருத்து என்ன ? பலவருண அங்கியைப் பெற்றவர்கள் எப்படிப்பட்ட மனோபாவம் உடையவர்களாய் இருக்க வேண்டும் ?

விடை : (பக்கம் 16)